முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2018

## 62 - குடியியற் கல்வி

## புள்ளி வழங்கும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணாங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

# கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2018
## 62 - குடியியற் கல்வி I, II
### இறுதிப்புள்ளிகளைக் கணித்தல்

**வினாப்பத்திரம் I**

வினாப்பத்திரம் I - 1 x 40 = 40 புள்ளிகள்

வினா இலக்கம் 01 - 40 ( 1 x 40 ) = 40 புள்ளிகள்

**வினாப்பத்திரம் II**

முதலாம் வினா மற்றும் ஏனைய நான்கு வினாக்கள் உள்ளிட்ட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

இறுதிப் புள்ளி வழங்கல்.

பகுதி II 1 ஆம் வினா 02 x 10 **20 புள்ளிகள்**

2 ஆம் வினா 10
3 ஆம் வினா 10
4 ஆம் வினா 10
5 ஆம் வினா 10
6 ஆம் வினா 10
7 ஆம் வினா 10

} 04 வினாக்களிற்கு 10 x 04 = 40 புள்ளிகள்

| | | |
|---|---|---|
| **வினாப்பத்திரம் I** | - | **40 புள்ளிகள்** |
| **வினாப்பத்திரம் II** | - | **60 புள்ளிகள்** |
| **மொத்தம்** | - | **100 புள்ளிகள்** |

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................ ✓ $\frac{4}{5}$
............................................................
............................................................

(ii) ............................................................ ✓ $\frac{3}{5}$
............................................................
............................................................

(iii) ............................................................ ✓ $\frac{3}{5}$
............................................................
............................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன்பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் “வினாப்பத்திரம் I” என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.** பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி “வினாப்பத்திரம் II” எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் “வினாப்பத்திரம் I” என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி “வினாப்பத்திரம் II, III” எனும் நிரல்களில் உரிய நிரலில் பதிதல் வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**
**சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II, மற்றும் III என்ற நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.**

ooo

# கா.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018
# 62 - குடியியற் கல்வி

**முதலாம் வினாப்பத்திரத்தின் நோக்கங்கள்**

- ஜனநாயக ஆட்சிமுறையின் முக்கியத்துவம், அதிகாரப் பகிர்வு மற்றும் பரவலாக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.

- பண்பாட்டுச் சமூகம் ஒன்றில் வாழும் பிரஜைகள் கொண்டு இருக்க வேண்டிய மானிடப்பண்புகள் மற்றும் விழுமியங்கள் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.

- பல்வேறு பொருளாதார முறைகளின் பண்புகளையும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பான அறிவையும், மனப்பாங்கையும் பரீட்சித்தல்.

- சட்டம் மற்றும் ஒழுங்கு, மோதல் முகாமைத்துவம், மனித உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்கைப் பரீட்சித்தல்.

# கா.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018
# 62 - குடியியற் கல்வி

## இரண்டாம் வினாப்பத்திரத்தின் நோக்கங்கள்

- சனநாயகமொன்றில் மோதல் ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் மோதல் தீர்வுக்காக பின்பற்றக்கூடிய வழிமுறைகள் தொடர்பில் ஒப்பீட்டு ரீதியான விளக்கத்தைப் பரீட்சித்தல்.
- பொருளாதார முறையொன்றில் உற்பத்திக் காரணிகள், உற்பத்தி மேற்கொள்ளப்படும் துறைகள் மற்றும் உற்பத்திப் பொருட்களின் இயல்புகள் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.
- மனித உரிமைகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பான அறிவையும், விளக்கத்தையும் மனப்பாங்கினையும் பரீட்சித்தல்.
- இலங்கையில் நடைமுறையில் உள்ள நீதித்துறை மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் பகுப்பாய்வு, பகுத்தாராயும் அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.
- அதிகாரப் பகிர்வு அல்லது அதிகாரப் பரவலாக்கத்தின் முக்கியத்துவம் மற்றும் நன்மை தீமைகள் தொடர்பில் உய்த்தறியும் அறிவைப் பரீட்சித்தல்.
- அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களில் காணப்படும் அதிகாரங்கள் கடமைகள், பொறுப்புக்கள் தொடர்பான அறிவு, விளக்கம் பனப்பாங்கைப் பரீட்சித்தல்.
- சூழல் பிரச்சினை மற்றும் நிலையான அபிவிருத்தித் தொடர்பில் அரசாங்கம் மற்றும் பிரஜைகளின் கடமைகள் மற்றும் மனப்பாங்குகள் தொடர்பில் பரீட்சித்தல்.
- சர்வதேச உறவுகள் ஏற்படுவதற்கான காரணிகள், முக்கியத்துவம் மற்றும் நன்மை தீமைகள் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**62 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2018**

පුරවැසි අධ්‍යාපනය I, II
**குடியியற் கல்வி I, II**
Civic Education I, II

12.12.2018 / 0830 - 1140

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## குடியியற் கல்வி I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** மனிதனின் நிலைப்பிற்கு அத்தியாவசியமான அடிப்படை அம்சங்கள் எப்பெயரால் அழைக்கப்படும்?
(1) விருப்பு
(2) பொருட்களும் சேவைகளும்
(3) தேவைகள்
(4) உற்பத்தி

**2.** இலங்கையின் பிரதான சட்ட அலுவலர்
(1) பிரதம நீதியரசராவார்.
(2) நீதியமைச்சராவார்.
(3) சட்டமா அதிபராவார்.
(4) ஒம்பூட்ஸ்மன் ஆவார்.

**3.** ஒற்றையாட்சி அரசுகளை மட்டும் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) பெரிய பிரித்தானியா, யப்பான், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா
(2) யப்பான், நேபாளம், பிரான்ஸ், இலங்கை
(3) இந்தியா, இலங்கை, பெரிய பிரித்தானியா, பிரான்ஸ்
(4) ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, யப்பான், பிரான்ஸ்

**4.** அபிவிருத்தியை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் நவீன அளவைகளில் ஒன்றாக அமைவது,
(1) தலா தேசிய உற்பத்தி ஆகும்.
(2) தனி நபருக்கான தலா தேசிய உற்பத்தி ஆகும்.
(3) மனித அபிவிருத்திச் சுட்டி ஆகும்.
(4) பொருளாதார வளர்ச்சி வேகம் ஆகும்.

**5.** அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) நோர்வே, யப்பான், பங்களாதேசம், கனடா
(2) இந்தியா, சோமாலியா, எதியோப்பியா, சியாராலியோன்
(3) பெல்ஜியம், மியன்மார், பிரான்ஸ், ஜேர்மன்
(4) நேபாளம், அவுஸ்திரேலியா, சுவீடன், ஐக்கிய அமெரிக்கா

**6.** நேரடி ஜனநாயக ஆட்சி முறையை நடைமுறைப்படுத்தும்போது தோன்றும் பிரச்சினை
(1) அரசில் பல்வேறு கட்சிகள் காணப்படல்.
(2) அரசு அதிகளவு சனத்தொகையைக் கொண்டிருத்தல்.
(3) உரிய காலத்தில் தேர்தல் நடாத்தப்படல்.
(4) பிரசைகளிடையே வருமான வேறுபாடு காணப்படல்.

7. ஒரு கட்சி முறையைக் கொண்ட நாடு,
(1) பெரிய பிரித்தானியா
(2) ஐக்கிய அமெரிக்கா
(3) சீனா
(4) அவுஸ்திரேலியா

8. சனநாயக அரசொன்றில் மக்களுக்குரிய அதிகாரம் அறியப்படுவது,
(1) இறைமையதிகாரம் என
(2) சட்டபூர்வ அதிகாரம் என
(3) சர்வசன வாக்குரிமை என
(4) சட்டத்தின் ஆட்சியதிகாரம் என

9. சார்க் அமைப்பினை ஏனைய சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புகளுடன் ஒப்பிடும்போது சார்க் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான நெருக்கமான உறவு பலவீனமான நிலையில் காணப்படுவதற்கான காரணமாக அமைவது,
(1) பல்வேறுபட்ட சமய, கலாசாரப் பண்புகளைக் கொண்டுள்ளமை
(2) இயற்கை அனர்த்தங்களுக்குத் தொடர்ச்சியாக முகங்கொடுக்கின்றமை
(3) குறைந்த எழுத்தறிவு மட்டத்தைக் கொண்டுள்ளமை
(4) உள்நாட்டு அரசியல் பிரச்சினை மற்றும் யுத்த நிலைமைகளின் தாக்கத்திற்குட்பட்டுள்ளமை

10. உரிமைகள் மற்றும் அதனோடிணைந்த ஒழுக்கரீதியான கடமைகள் குறிப்பிடப்படும் விடையைத் தெரிவு செய்க.
(1) அரசினால் விதிக்கப்படும் வரியைச் செலுத்துதல்
(2) சூழலைப் பாதுகாத்தல்
(3) அரசியலமைப்பிற்கிணங்க செயற்படல்
(4) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்

11. இலங்கையில் மாகாண சபையொன்றின் முதலமைச்சர் நியமனம் செய்யப்படுவது
(1) சனாதிபதியால் (2) ஆளுநரால் (3) பிரதம மந்திரியால் (4) சபாநாயகரால்

12. இலங்கையில் நிர்வாக நடவடிக்கைகளினால் பிரசை ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்படுமாயின் அது தொடர்பில் முறைப்பாடு செய்ய வேண்டியது,
(1) ஓம்பூட்ஸ்மனிடம்
(2) சட்டமா அதிபரிடம்
(3) ஜனாதிபதியிடம்
(4) பிரதம நீதியரசரிடம்

13. நாடொன்றின் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 'அங்கீகரிக்கப்பட்ட செயன்முறைவிதிகள்' அறியப்படுவது
(1) ஒழுக்க நெறிகள் என
(2) பழக்க வழக்கங்கள் என
(3) கலாசாரம் என
(4) சமூகம் என

14. பல்கலாசார சமூகமொன்றின் பிரசையொருவர் கொண்டிருக்க வேண்டிய குணவியல்பு,
(1) ஏனையோரின் கலாசாரத்திற்கு மதிப்பளித்தல்
(2) பெரும்பான்மை இனத்தவரின் கலாசாரத்திற்கு மதிப்பளித்தல்
(3) பிற சமயங்களைத் தழுவுதல்
(4) கலப்புத் திருமணம் செய்தல்

15. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவு **அல்லாத** நிகழ்வானது,
(1) சமுத்திரத்தின் நீர்மட்டம் உயர்வடைதல்
(2) எல்னினோ பாதிப்பு ஏற்படல்
(3) சுனாமி ஏற்படல்
(4) சூழல் வெப்பநிலை உயர்வடைதல்

16. தேசிய அரசொன்றின் முக்கிய பண்பு,
(1) பாராளுமன்றம்
(2) நிறைவேற்றுத்துறை
(3) அரசாங்கம்
(4) நீதிமன்றம்

17. அதிகாரப் பரவலாக்கத்தின்போது அவதானிக்கக்கூடிய சிறப்பியல்பாவது,
(1) வேற்றுமையில் ஒற்றுமை கட்டியெழுப்பப்படல்.
(2) எழுதப்பட்ட அரசியலமைப்பு காணப்படல்.
(3) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரத்தை மீளப்பெறக்கூடியதாயிருத்தல்.
(4) அனைத்து தீர்மானங்களும் மத்திய அரசாங்கத்தினால் எடுக்கப்படல்.

**18.** இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு **உரித்தல்லாத** பணி
(1) உள் வீதிகளை அமைத்தல்
(2) பொது மலசலகூட நிர்மாணிப்பும் பராமரிப்பும்
(3) பிரதேசத்தில் சிறிய பாடசாலைகளை நிர்மாணித்தல்
(4) பொது வாசிப்பு நிலையங்களை நடாத்திச் செல்லல்

**19.** தனியாளொருவரின் உள்வாரி மற்றும் வெளிவாரியான காரணிகளின் நிமித்தம் உருவாகும் மோதல் எவ்வாறு அறியப்படுவது,
(1) கோத்திரங்களுக்கிடையே ஏற்படும் மோதல்
(2) அரசியல் கருத்துக்களின் விளைவாகத் தோன்றும் மோதல்
(3) தனியாளுக்குள் உருவாகும் மோதல்
(4) சமூகக் காரணிகளால் உருவாகும் மோதல்

**20.** ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் மூலம் சிறுவர்களாகக் கணிக்கப்படும் வயதெல்லை எது?
(1) 18 வயதுக்குக் குறைந்தோர் (2) 16 வயதுக்குக் குறைந்தோர்
(3) 15 வயதுக்குக் குறைந்தோர் (4) 14 வயதுக்குக் குறைந்தோர்

**21.** உலக மயமாக்கலின் விளைவாக இலங்கை முகம் கொடுத்துள்ள சாதகமான விளைவாவது
(1) பொருளாதாரப் பல்வகைமை ஏற்படல்
(2) மூளைசாலிகளின் வெளியேற்றம் துரிதமாக இடம்பெறல்.
(3) உள்நாட்டு ஆரம்பக் கைத்தொழில்கள் அழிவுறல்
(4) வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் உதவிகளைக் கொண்டு பிழைக்க வேண்டியிருத்தல்

**22.** நாடொன்றின் பிரசையொருவருக்குரிய அடிப்படை உரிமைகளை உள்ளடக்கியுள்ள முக்கிய ஆவணம் எப்பெயரால் அழைக்கப்படும்?
(1) மனித உரிமைகள் பிரகடனம் (2) அரசியலமைப்பு
(3) தண்டனைச் சட்டக் கோவை (4) ஒருங்கியை பட்டியல்

**23.** அடிப்படை உரிமைகள் தொடர்பில் **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
(1) அனைத்து மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளாகும்.
(2) அனைத்து மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளன்று.
(3) அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது சட்ட உதவியைப் பெறமுடியும்.
(4) அரசியல் யாப்பில் உள்வாங்கப்படாத உறுப்புரைகள் அடிப்படை உரிமைகளாகாது.

**24.** நாடொன்றின் சமூகநீதி வீழ்ச்சியடைவதற்கு ஏதுவாயமைந்த காரணத்தைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) பொதுச் சேவை அரசியல் மயமாக்கலுக்குட்படாமை.
(2) பொருளாதார மற்றும் மனித வளங்கள் குன்றுதல்.
(3) பொதுச்சேவை வினைத்திறனுடன் செயற்படல்.
(4) லஞ்சமும் ஊழலும் அதிகரித்தல்.

**25.** நிலைமாறும் பொருளாதாரங்களில் அவதானிக்கக்கூடிய பண்பாக அமைவது,
(1) தனியார் மற்றும் பொது முயற்சிகள் போன்ற இரண்டு பிரிவுகள் காணப்படல்.
(2) உற்பத்திக் காரணிகளின் உரிமையானது தனியார் துறைக்குரித்தாதல்.
(3) மானியங்கள் மற்றும் விலைக்கட்டுப்பாட்டு முறையைத் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
(4) நட்டத்தில் இயங்கும் பொது முயற்சிகளைத் தனியார் மயமாக்குதல்.

**26.** அரசியலமைப்பில் சமயத்திற்கு முன்னுரிமை **வழங்காத** நாடு எது?
(1) இலங்கை (2) பாகிஸ்தான் (3) இந்தியா (4) பங்களாதேசம்

**27.** ஆலோசனைகளை முன்வைத்தல் மற்றும் பேரம்பேசுதல் பெருமளவில் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) தொழில் பிணக்குகள், தோட்டத் தொழிலாளர் பிணக்குகள்
(2) தனிப்பட்ட பிணக்குகள், ஊழியரது பிணக்குகள்
(3) தனிப்பட்ட பிணக்குகள், பொதுப் பிணக்குகள்
(4) சொத்துப் பிணக்குகள், குடும்பப் பிணக்குகள்

**28.** அரசின் பிரதான வகைகள் இரண்டு யாவை?
(1) சனாதிபதி மற்றும் பாராளுமன்ற அரசாகக் காணப்படல்
(2) சர்வாதிகார மற்றும் சனநாயக அரசாகக் காணப்படல்
(3) ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டியாட்சி அரசாகக் காணப்படல்
(4) தேசிய மற்றும் பிரதேச அரசாகக் காணப்படல்

**29.** சர்வதேச தொழிலாளர் தாபனம் (ILO) பற்றிய மிகச்சரியான கூற்றைத் தெரிவுசெய்க,
(1) சுயாதீனமாக உருவாகிப் பின்னர் சர்வதேச சங்கத்தின் இணை நிறுவனமாகச் செயற்படல்
(2) சுயாதீனமாக உருவாகிப் பின்னர் ஐக்கியநாடுகள் சபையின் இணை நிறுவனமாகச் செயற்படல்
(3) ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் உருவாக்கப்பட்டு செயற்படல்
(4) ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்பின்றி சுயாதீனமாகச் செயற்படல்

**30.** சமூகச் சூழல் என்பதனாற் கருதப்படுவது,
(1) மனிதனது தலையீடின்றி உருவான கூறுகளாகும்
(2) மனிதனால் கட்டியெழுப்பப்பட்டதாகும்
(3) பௌதிகக் கூறுகளால் கட்டியெழுப்பப்பட்டதாகும்
(4) பௌதிகக் கூறுகளுக்கிடையிலான இடைத்தொடர்பினால் கட்டியெழுப்பப்பட்டதாகும்

**31.** தமது நாட்டில் சட்டத்தை அமுல்படுத்தும் செயற்பாடு முடிவடைந்ததும் அதனால் திருப்தியுறாதவிடத்து முறைப்பாடு செய்யக்கூடிய மனித உரிமைகள் ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது,
(1) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்பாடு ஒப்பந்தத்திற்கிணங்க
(2) பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைக்கு இணங்க
(3) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தத்துடன் இணைந்த முதலாவது விருப்பிலான பின்னேட்டிற்கு இணங்க
(4) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையுடன் சேர்க்கப்பட்ட இரண்டாவது விருப்பிலான பின்னேட்டிற்கு இணங்க

**32.** பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களில் இலங்கையர்களுக்கு அதிக அரசியல் பங்குபற்றல் கிடைத்தது எந்த அரசியலமைப்புச் சீர்திருத்தத்திலாகும்?
(1) கோல்புறூக்
(2) குறு மக்கலம்
(3) மனிங்
(4) டொனமூர்

**33.** சனநாயக ஆட்சி முறையொன்றை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக அமைவது,
(1) அரசாங்க சார்பற்ற நிறுவனங்களை வலுப்படுத்தல்
(2) அரச ஊழியர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்குதல்
(3) ஆளுங்கட்சியின் செயற்பாடுகளை விமர்சித்தல்
(4) ஊடகச் சுதந்திரத்தைப் பேணுதல்

**34.** தேர்தலொன்றில் பொது மக்கள் விரும்பும் அரசாங்கமொன்றை அதிகாரத்தில் அமர்த்துவதில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக அமைவது,
(1) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறல்
(2) சட்டத்தின் ஆட்சி பாதுகாக்கப்படல்
(3) மக்களுக்குப் போதியளவு அரசியலறிவு காணப்படல்
(4) அனைவருக்கும் சமவுரிமை காணப்படல்

**35.** சர்வதேச அரசியலில் பலம்வாய்ந்த நாடுகள் பலம் குன்றியநாடுகள் மீது அழுத்தம் கொடுப்பதற்குப் பயன்படுத்துவது,
(1) கலாசார ஒத்துழைப்பு
(2) கல்வி அபிவிருத்தி
(3) சமயச் சம்பிரதாயங்கள்
(4) சர்வதேச வர்த்தகம்

**36.** நாடொன்றின் பிரசைகளுக்கு சனநாயக ஆட்சிமுறையில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு **கிடைக்காமை** பின்வரும் எந்தச்சந்தர்ப்பத்திலாகும்?
(1) வாக்களிப்பதன் மூலம் தமது பிரதிநிதியைத் தெரிவு செய்தல்
(2) வேட்பாளராக முன்னிற்றல்
(3) கல்வி, சுகாதாரம் போன்றவற்றை இலவசமாக வழங்குதல்
(4) அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்தல்

**37.** ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளினை மட்டும் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) யப்பான், சீனா, இந்தியா, பிரான்ஸ்
(2) சீனா, பிரித்தானியா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்க நாடுகள்
(3) ஐக்கிய அமெரிக்க நாடுகள், ரஷ்யா, இந்தியா, அவுஸ்திரேலியா
(4) பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள், பிரான்ஸ், ஜேர்மன்

**38.** மோதலைக் குறைத்துக் கொள்வதற்காகப் பிரசையொருவரில் விருத்தி செய்ய வேண்டிய சமூகப் பண்பாவது
(1) உயிரச் சேதத்தைத் தவிர்த்தல்.
(2) மன அழுத்தத்தைக் குறைத்தல்.
(3) ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்.
(4) ஆக்கபூர்வமாக சிந்திக்குமாற்றலை விருத்தி செய்தல்

**39.** பின்வரும் 'அ' நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள நீதி நிறுவனங்களுடன் 'ஆ' நிரலில் தரப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகளை வரிசையொழுங்கில் சரியாகப் பொருத்தும்போது பெறப்படும் விடையைத் தெரிவுசெய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1 - உயர் நீதிமன்றம் | A - பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான குற்றங்கள் |
| 2 - மேன்முறையீட்டு நீதிமன்றம் | B - திருமணம் தொடர்பான வழக்குகள் |
| 3 - மேல் நீதிமன்றம் | C - வருமானம் தொடர்பான வழக்குகள் |
| 4 - நீதவான் நீதிமன்றம் | D - ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு மீதான விசாரணை |
| | E - கொலை தொடர்பான வழக்கு |
| | F - வர்த்தகப் பிரச்சினைகளைத் தீர்த்தல் |
| | G - ஹேபியஸ் கோபுஸ் கட்டளையைப் பிறப்பித்தல் |

(1) A, G, B, E (2) B, D, F, G (3) D, G, E, A (4) G, E, F, D

**40.** பின்வருவன வளி மாசடையும் வழிமுறைகள் சிலவாகும்
A - எரிமலை வெடிப்பு
B - போக்குவரத்து நடவடிக்கைகள்
C - தூசுப்படலம்
D - காட்டுத்தீ
E - ஆகாய விமானப் பயன்பாடு

மேற்கூறப்பட்ட முறைகளில் இயற்கையான வழிமுறைகள் மட்டும் அடங்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B, E (2) A, C, D (3) B, C, E (4) C, D, E

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහසයි
அந்தரங்கமானது

# අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2018
# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

විෂයය අංකය / பாட இலக்கம்: **62**　　විෂයය / பாடம்: **குடியியற் கல்வி**

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 1 | 31. | 3 |
| 02. | 3 | 12. | 1 | 22. | 2 | 32. | 4 |
| 03. | 2 | 13. | 3 | 23. | 1 | 33. | 4 |
| 04. | 3 | 14. | 1 | 24. | 4 | 34. | 3 |
| 05. | 2 | 15. | 3 | 25. | 4 | 35. | 4 |
| 06. | 2 | 16. | 3 | 26. | 3 | 36. | 3 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 1 | 37. | 2 |
| 08. | 1 | 18. | 3 | 28. | 3 | 38. | 3 |
| 09. | 4 | 19. | 3 | 29. | 2 | 39. | 3 |
| 10. | 2 | 20. | 1 | 30. | 2 | 40. | 2 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25 / 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25 / 40

# II பத்திரத்திற்கான வினாக்களும் விடைகளும்

1. (i) மனித உரிமைகளை நடைமுறைப்படுத்தும்போது விசேட கவனிப்பு வழங்கப்பட்டுள்ள **இரு** தரப்பினரைக் குறிப்பிடுக.
   (ii) உலகில் யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற பிராந்திய அமைப்புக்கள் **இரண்டினைப்** பெயரிடுக.
   (iii) சூழலிலிருந்து மனிதனுக்குக் கிடைக்கும் பொருளாதார உதவிச் சேவைகள் **இரண்டை** எழுதுக.
   (iv) போட்டித் தன்மை வாய்ந்த கட்சி முறையொன்றின் சிறந்த பண்புகள் **இரண்டை** எழுதுக.
   (v) நல்லாட்சி முறையின் அடிப்படைப் பண்புகள் **இரண்டைப்** பெயரிடுக.
   (vi) சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதத்திற்கேற்ப அதன் பிரதான வகைகள் **இரண்டினை** குறிப்பிடுக.
   (vii) மோதல் தீர்விற்காகப் பின்பற்றத்தக்க முறைகள் **இரண்டை** எழுதுக.
   (viii) அபிவிருத்திச் செயன்முறையின்போது கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய பிரிவுகள் **இரண்டை** பெயரிடுக.
   (ix) சோல்பரி அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் இலங்கைக்குக் கிடைத்த **இரண்டு** அம்சங்களைப் பெயரிடுக.
   (x) சுவிட்சர்லாந்து சமஷ்டி முறையின் சிறப்பியல்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

i. - பெண்கள்
   - சிறுவர்

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

ii. - நேட்டோ
   - வோர்சோ

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

iii. - மூலப்பொருட்கள் - நிலம்
   கனியவளங்கள்
   இரசாயனப் பொருட்கள்
   தாவரங்கள்
   விலங்குகள்
   உணவுகள்
   - சக்தி - சூரியசக்தி
   உயிர்ச்சுவட்டு எரிபொருள்
   உயிரியல் வாயு
   புவி வெப்பம்
   நீர் மின்சாரம்
   காற்று

பிரதான விடயங்கள் இரண்டையோ அல்லது அவற்றின் கீழ்வரும் விடயங்கள் இரண்டையோ எழுதியிருப்பின் புள்ளிகளை வழங்கவும்.

இரண்டை குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

iv. - மக்கள் தமது கரு.த்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகரித்தல்.
- ஏதேச்சதிகார ஆட்சியைத் தடுத்தல்.
- ஆளுக்கட்சியின் பாதகமான தீர்மானங்களை விமர்சிப்பதன் மூலம் அதனைத் திருத்திக் கொள்வதற்கான வாய்ப்புக் காணப்படுதல்.
- மக்கள் சமூகத்தில் காணப்படும் பல்வகைமைத் தன்மை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் காணப்படும்.
- பல்வகையில் ஒன்றுபட்டு செயற்பட வழி ஏற்படுதல்.
- வேற்றுமையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப உதவும்.
- வாக்காளருக்குத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் அதிகம்.

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

v. - பொதுமக்களின் பங்குபற்றுகை
- ஊழல்களற்ற முறைகேடுகளற்ற ஆட்சியும் நிர்வாகமும்.
- சுதந்திரமும், நீதியும் நிலைநாட்டப்படல்.
- சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளித்தலும் நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்படலும்.
- ஆட்சியதிகாரங்களை நடைமுறைப்படுத்துவோர் மக்களுக்கும் பொறுப்புக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருத்தல்.
- உரிமைகள் பாதுகாக்கப்படலும், உறுதி செய்யப்படலும்.
- ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தல்.
- வளங்களை வினைத்திறனான வகையில் பயன்படுத்தல்.
- வெளிப்படைத் தன்மையான வகையில் செயற்படல்.
- அரசியல் சமுதாயப்படுத்தலுக்கு அவசியமான பின்னணியை உருவாக்குதல்.
- அரசியல் யாப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நிர்வாகம் இடம் பெறுவதைப் பாதுகாத்தலும், உறுதி செய்தலும்.
- வகை கூறல்

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

vi. - தேசிய சட்டம்
- சர்வதேசச் சட்டம்

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

vii.- கலந்துரையாடல்
- வேண்டுகோள் விடுத்தல்
- ஆலோசனைகளை முன்வைத்தல்
- ம.த்தியஸ்தம் வகித்தல்
- இணக்கப்படுதல்
- காப்பாற்றுதல்
- தீர்ப்பு வழங்கல்
- ஆலோசனை வழங்கல்

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

viii.
- நிலையான அபிவிருத்தி
- பொருளாதார அபிவிரு.த்தி
- தனிமனித அபிவிருத்தி
- பண்பாடு அபிவிருத்தி
- சமூக அபிவிருத்தி / கலாசார அபிவிருத்தி
- ஒழுக்க / விழுமிய அபிவிருத்தி
- எழுத்தறிவு அபிவிருத்தி

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

ix. - 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்தது.
- மந்திரிசபை (கெபினட்) ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பிரித்தானிய முடியின் பிரதிநிதியாக ஆளுநர் நாயகம் பதவி ஏற்படுத்தப்பட்டது.
- இலங்கையின் இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றமாகப் பிரித்தானியாவின் பிரிவுக் கவுன்சில் (கோமறைக்கழகம்) ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- அரசாங்க சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு என்பன ஏற்படுத்தப்பட்டன.
- சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக யாப்பின் 29 ஆம் சரத்து சேர்க்கப்பட்டது.

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

x. - மத்திய அரசுக்கும் "கென்ரன்" அரசுகளுக்குமான அதிகாரம் யாப்பில் கூறப்பட்டுள்ளதுடன் ஏனைய அதிகாரங்கள் யாவும் மத்திய அரசுக்குரியன.
- அதிகாரங்களை செயற்படுத்தும் போது பிரச்சினையொன்று உருவாகுமானால் அதனைத் தீர்க்கும் அதிகாரம் சமஷ்டிப் பேரவைக்குரியது.
- கென்ரன்களுக்கு தமது அதிகாரத்தை செயற்படுத்துவதில் சுயாதீனமாக செயற்பட முடியாது.
- கென்ரன் அரசுகள் தீர்மானம் மேற்கொள்ளும் போது மக்கள் கருத்துக்களைக் கோருவதற்கு நேரடி சனநாயக முறைகளைப் பிரயோகிக்க முடியும்.

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

**(மொத்தம் 02 x 10 = 20 புள்ளிகள்)**

**2.** மோதல் ஏற்படுதலானது நபர்களுக்கு மட்டுமன்றி சமூகத்திற்கும் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

(i) மோதல் ஏற்படுவதற்கான காரணிகள் **இரண்டு** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) சர்வதேச ரீதியில் மோதல்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) மோதல் தீர்வுக்காக இணக்கப்படுத்தல் வழிமுறையைப் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் **மூன்றைப்** பெயரிட்டு அவற்றுள் ஒரு வழிமுறையைப் பயன்படுத்தும் விதத்தை விவரிக்குக. (05 புள்ளிகள்)

i. - பல்வகைமை.த் தோற்றப்பாடுகள்
- வேறுபட்ட கருத்துக்கள்
- எல்லைப்படுத்தப்படல்.
- இடையூறுகள் ஏற்படுத்தல்
- உளவியல் நிலைமை
- அபிலாசைகள் நிறைவேறாமை.

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

ii. - முதலாளித்துவ, சோசலிச அதிகார வர்க்கங்களிடையே நிலவிய மோதல்.
- மேலைத்தேய, கீழைத்தேய பண்பாடுகளிடையே நிலவிய மோதல்.
- வளங்களைக் பகிர்வதற்கான முரண்பாடு.
- மேலைத்தேய நாடுகளுக்கும் மத்தியகிழக்கு நாடுகளுக்குமிடையே கொள்கை ரீதியில் ஏற்பட்டுள்ள முரண்பாடு.
- யுத்தத்திற்கு வளச் சுண்டல்
- பொருளாதார முரண்பாடு
- அதிகார ஆசை
- பொருளாதார நலன்
- அரசியல் முரண்பாடு
- சமயரீதியான மோதல்
- அனுமதியில்லாமல் தஞ்சமடைதல்

மூன்றைக் குறிப்பிடுவதற்கு (03 புள்ளிகள்)

iii. - குடும்ப பிரச்சினையைத் தீர்ப்பதற்கு
- தொழிலாளர் பிரச்சினைத் தீர்வுக்கு
- குழுக்களுக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு
- பொதுச் சொத்துக்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு
- சிறு குற்றங்களை விசாரிப்பதற்கு

  உதாரணம் : அவமானப்படுத்தல், அச்சுறுத்தல், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல்.
- காணித்தகராறு

03 விடயங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குதல்

மூன்று விடயங்களுக்கு - 03 புள்ளிகள்

ஒரு விடயத்தை விளக்குவதற்கு - 02 புள்ளிகள்

**(மொத்தம் 03 + 02 = 05 புள்ளிகள்)**

**3.** பொருளாதாரமொன்றில் ஏற்படும் செயன்முறைகளில் உற்பத்திச் செயன்முறையானது முக்கியமானதாகும்.

(i) உற்பத்திக் காரணிகள் **இரண்டைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) பொருளாதாரமொன்றில் உற்பத்திச் செயன்முறை இடம்பெறும் முக்கிய துறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்தும் விதத்திற்கேற்ப வகைப்படுத்தக்கூடிய பிரிவுகள் **மூன்றைக்** பெயரிட்டு அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

i. - நிலம்
- உழைப்பு
- மூலதனம்
- முயற்சி

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

ii. - விவசாய உற்பத்தி
- கைத்தொழில் உற்பத்தி
- சேவைகள் உற்பத்தி

மூன்றைக் குறிப்பிடுவதற்கு (03 புள்ளிகள்)

iii. - நுகர்வுப் பொருட்கள்
- இடைநிலைப் பொருட்கள்
- மூலதனப் பொருட்கள்

03 விடயங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குதல்

மூன்று விடயங்களுக்கு - 03 புள்ளிகள்

ஒரு விடயத்தை விளக்குவதற்கு - 02 புள்ளிகள்

**(மொத்தம் 03 + 02 = 05 புள்ளிகள்)**

4. இலங்கையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் பல்வேறு நீதி நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன
   (i) இலங்கையின் நீதிமன்ற முறைமையில் அதியுயர் நீதிமன்றங்கள் **இரண்டை** வரிசையொழுங்கில் பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) இலங்கையில் காணப்படும் சிறப்புச் சட்ட வகைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (iii) நாடொன்றில் சட்டத்தைப் பிறப்பிப்பதன் நோக்கங்கள் **மூன்றைக்** பெயரிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குக. (05 புள்ளிகள்)

i. - உயர் நீதிமன்றம்
   - மேன்முறையீட்டு நீதிமன்றம்

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

ii. - கண்டியச் சட்டம்
   - தேச வழமைச் சட்டம்
   - முஸ்லீம் சட்டம் (ஷரியா சட்டம்)

மூன்று காரணிகளுக்கு குறிப்பிடுவதற்கு (03 புள்ளிகள்)

iii.
- சமூக பொருளாதார அரசியல், கலாசார அபிவிருத்தி
- சட்டத்தை மதிப்பதற்கு
- சட்டத்திற்கு கீழ்ப்படிவதற்கு
- பொதுமக்களின் வாழ்க்கை பாதுகாக்கப்படும் வகையில் மனித நடவடிக்கையை நிர்வகிப்பதனூடாக நீதியை நிலை நாட்டுதல்.
- மனித நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல்.
- பக்கச் சார்பின்றி சகல தரப்பினரின் கருத்துக்களை செவிமடுத்து, சட்டத்தை நிலை நாட்டுதல்.
- மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.
- சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- நிலையான தன்மையை ஏற்படுத்தல்.

03 விடயங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குதல்

மூன்று விடயங்களுக்கு - 03 புள்ளிகள்
ஒரு விடயத்தை விளக்குவதற்கு - 02 புள்ளிகள்

**(மொத்தம் 03 + 02 = 05 புள்ளிகள்)**

**5.** அரசொன்றின் அதிகாரங்களை மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையில் பகிர்தல் சமஷ்டி அரசு எனப்படும்.

(i) சமஷ்டி அரசாங்கம் நிலவும் நாடுகள் **இரண்டைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) சமஷ்டி ஆட்சி முறையொன்று தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) சமஷ்டி ஆட்சிமுறையின் பிரதிகூலங்கள் **மூன்றைக்** குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விவரிக்குக. (05 புள்ளிகள்)

i. - ஐக்கிய அமெரிக்கக் குடியரசு
- சுவிற்சலாந்து
- இந்தியா
- அவுஸ்திரேலியா
- கனடா

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

ii.

- சமூக அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளின் சிக்கலான தன்மை.
- 2 ஆம் உலக யுத்தத்தின் பின் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட அரசியல் போட்டி நிலைமை.
- நிதி தொடர்பாக மத்திய அரசின் பலம்.
- தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டமை.
- தரைத்தோற்ற வேறுபாடு காரணமாக பொருளாதார அபிவிருத்தியை அடைவது கடினமாக இருந்தமை.
- இன, மொழி, சமய வேறுபாடுகளுக்கு தீர்வு காண வேண்டிய நிலைமை.
- சர்வதேச வியாபாரமும் சர்வதேச நடவடிக்கையும்.
- தேசிய பொருளாதார அபிவிருத்தி

மூன்று காரணியை குறிப்பிடுவதற்கு (03 புள்ளிகள்)

iii.

- அதிகாரப் பங்கீட்டின் போது தமக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்கள் தொடர்பில் மாநில அரசுகள் அதிருப்தியுடன் செயற்படுதல்.
- மாநிலங்கள் மத்திய அரசிலிருந்து விலகிச் செல்லும் போக்கு காணப்படுதல்.
- மத்திய மாநில அரசுகள் யாப்பின் மூலம் தீர்வுகளுக்கு வரும் போது சில துறைகளில் ஏற்படும் பிரச்சினைகளால் நிர்வாகம் ஸ்தம்பித்தல்.
- இரண்டாம் மன்றமொன்று செயற்படுவதால் சட்டவாக்க நடவடிக்கைகள் தாமதமடைதல்.
- மாநில நிர்வாகம் தொடர்பில் அனுபவமும் ஆற்றலும் மிக்க அதிகாரிகளுக்கான பற்றாக்குறை நிலவுவதனால் நிர்வாக முறை சீர்கெடல்.

மூன்று காரணிகளைக் குறிப்பிட்டிருப்பின் - 03 புள்ளிகள்

விளக்கத்திற்கு - 02 புள்ளிகள்

**(மொத்தம் 03 + 02 = 05 புள்ளிகள்)**

**6.** பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட இரு எண்ணக்கருக்களாகும்.

(i) 'அபிவிருத்தி' எனும் எண்ணக்கருவை வரைவிலக்கணம் செய்க. (02 புள்ளிகள்)

(ii) அபிவிருத்தியடைந்து வரும் நாடாகக் காணப்பட்டாலும் இலங்கையில் காணப்படும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குரித்தான இயல்புகள் **மூன்றை** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையில் அபிவிருத்திக்கான சவாலை வெற்றி கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

i. - அபிவிருத்தி என்பது பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் மானுடத் துறைகளில் முன்னேற்றம் ஏற்படுவதும் வறுமை நிலையைக் குறைப்பதன் மூலம் நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்துவமாகும்"

- சிக்கலான பண்பாடு மற்றும் சுற்றாடல் காரணிகள் ஆகியவற்றுக்கிடையிலான செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியடைதல் செயன்முறை அபிவிருத்தியாகும்.
- ஒரு நாட்டினது வறுமை நிலை ஒழிந்து வேலை வாய்ப்புக்கள் அதிகரித்து வருமானப் பகிர்விலுள்ள முரண்பாடு நீக்கப்படுமாயின் அதுவே அபிவிருத்தியாகும்.
- உற்பத்திகளின் அதிகரிப்பும் அதற்கு காரணமாய் அமைந்த நுட்ப முறைகளினதும் நிறுவன அமைப்புகளினதும் வளர்ச்சியே அபிவிருத்தியாகும்.
- அபிவிருத்தி என்பது உலகமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும்.
- அபிவிருத்தி என்பது சனத்தொகை, சமூகம், கலாசாரம், ஒழுக்கம் எனும் பண்புகளை உள்ளடக்கிய மாற்றம் மற்றும் வளர்ச்சி தொடர்பான செயற்பாடாகும்.

இரண்டைக் குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

ii. - அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சார்பில் இலங்கை உயர்வான எழுத்தறிவு மட்டத்தைக் கொண்டுள்ளது.

- சிசுமரணமும் பிரசவத்தாய் மரணவீதமும் குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது.
- ஆயுள் எதிர்பார்ப்பு உயர்வாகக் காணப்படுகிறது.

மூன்று காரணிகளைக் குறிப்பிடுவதற்கு (03 புள்ளிகள்)

iii. - சுற்றுலாத் துறையை மேம்படுத்தல்.

- உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்.
- தொழில்நுட்ப அறிவையும், திறன்களையும் விரிவுபடுத்தல்.
- அரசியல் உறுதிப்பாட்டைக் கட்டியெழுப்புதல்
- உள்நாட்டுச் சேமிப்பை ஊக்குவித்தல்.
- ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தல்.
- உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.
- ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களை ஊக்குவித்தல்.
- கடல்சார், கல்விசார், தொழினுட்பம்சார் கேந்திரநிலையமாக இலங்கையை உருவாக்குதல்.
- பலநோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை முன்வைத்தல்.

03 விடயங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குதல்

மூன்று விடயங்களுக்கு - 03 புள்ளிகள்

ஒரு விடயத்தை விளக்குவதற்கு - 02 புள்ளிகள்

**(மொத்தம் 03 + 02 = 05 புள்ளிகள்)**

**7.** உலகில் பல்வேறு வகையான பிராந்திய அமைப்புகள் உருவாகியுள்ளன.

(i) பிராந்திய அமைப்புக்கள் தோன்றுவதற்கு அடிப்படையான காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஆசியான் அமைப்பின் அங்கத்துவ நாடுகள் **மூன்றைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iii) ஆசியான் அமைப்பின் நோக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

i.
- பாதுகாப்பு நோக்கங்களை இலக்காகக் கொண்டு
- ஒத்துழைப்பினை இலக்காகக் கொண்டு
- அரசியல் உபாய நடவடிக்கை
- பிரபல்யமான நாடுகளின் ஆதிக்கக்கொள்கை
- வலயரீதியான அரசியல் அபிவிருத்தி
- யுத்த உபாயத் தொடர்பு

இரண்டு காரணியை குறிப்பிடுவதற்கு (02 புள்ளிகள்)

ii.
- இந்தோனேசியா
- சிங்கப்பூர்
- தாய்லாந்து
- பிலிப்பைன்ஸ்
- மலேசியா
- வியட்னாம்
- புரூனே
- மியன்மார்
- லாவோஸ்

மூன்று காரணியை குறிப்பிடுவதற்கு (03 புள்ளிகள்)

iii.
- ஒத்துழைப்புடனான ஒன்றுபட்ட பொருளாதார முறையை அங்கத்துவ நாடுகளில் செயற்படுத்தல்.
- பரஸ்பர உதவியுடனும் ஒத்துழைப்புடனும் ஆராய்ச்சித் துறைகளை மேம்படுத்தல்.
- விவசாய கைத்தொழில் துறைகளினது வளர்ச்சிக்காக ஒன்றுபடுதல்.
- அங்கத்துவ நாடுகளது வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதுடன்.
- சர்வதேச நடவடிக்கைகளின் போது ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகளை மேம்படுத்தல்.
- அங்கத்துவ நாடுகளது மனித வாழ்க்கையை மேம்படுத்தும் வகையில் தொடர்பாடல் துறையினை வளர்ச்சி காணச் செய்தல்.

இரண்டைக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

விளக்கத்திற்கு (03 புள்ளிகள்)

**(மொத்தம் 02 + 03 = 05 புள்ளிகள்)**